இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 29.05.2026

# பலம் இழந்த விஜய் அரசு!

தமிழ்நாட்டு மக்கள் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை இடங்களைத் தரவில்லை. கூடுதலாக அதிக இடம் பெற்ற கட்சியான த.வெ.க. இப்போது பல்வேறு கட்சிகளிடம் இருந்து இடங்களைக் கடன் வாங்கி ஆட்சி அமைத்துள்ளது. இவர்கள் யாரும் தேர்தலுக்கு முன்னதாக த.வெ.க.வுடன் கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்தித்தவர்களும் அல்ல. விஜய்யை முதலமைச்சர் ஆக்குவதற்காக வாக்குகளைப் பெற்ற கட்சிகளும் அல்ல.

‘காங்கிரஸ் கட்சி தி.மு.க.விடம் விலை போய்விட்டது’ என்று உளறினார் விஜய். தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் கட்சிதான் முதலில் விஜய்யை ஆதரித்தது. ‘தி.மு.க. வைத்திருக்கும் கல்லாப்பெட்டி கட்சிகள்’ என்று மற்ற கூட்டணிக் கட்சிகளைக் கிண்டலடித்தார் விஜய். அவர்களும் அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல், விஜய் ஆட்சி அமைப்பதற்கு தங்களது ஆதரவைத் தந்தார்கள். விடுதலைச் சிறுத்தைகளும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கும் அமைச்சரவைக்குள் போய்விட்டது. இவற்றை மொத்தமாகச் சேர்த்தால் 119 உறுப்பினர்கள் ஆதரவைக் கொண்டதுதான் விஜய் ஆட்சி.

அதாவது, ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மை என்பது 118. அதை விட ஒன்றே ஒன்றுதான் கூடுதலாக இருக்கிறது.

அமைச்சர் பதவி தருகிறேன். வாரியத் தலைவர் பதவிகள் தருகிறேன் என்று அ.தி.மு.க. வினருக்கு ஆசை வார்த்தை கூறினார் விஜய். அந்த அடிப்படையில் 25 பேரின் ஆதரவைத் தனக்குப் பெற்றார். பெரும்பான்மையை நிரூபிக்கும் நாளன்று இந்த 25 பேரும் விஜய் ஆட்சிக்கு ஆதரவாக வாக்களித்தார்கள். இதன் மூலமாக தனக்கு 144 உறுப்பினர் ஆதரவு இருப்பதைப் போல விஜய் காட்டிக் கொண்டார். **இது நியாயமான ஆதரவு இல்லை. அறமற்ற ஆதரவு ஆகும்.**

**அ.தி.மு.க.வின் கொறடா உத்தரவை மீறி வாக்களித்தால் அவர்கள் 25 பேர் பதவியும் பறிக்கப்படும். அதனால் அ.தி.மு.க.வின் அதிகாரப்பூர்வ கொறடாவையே அங்கீகரிக்காமல் வைத்திருந்தார் பேரவைத்தலைவர் ஜே.சி.டி. பிரபாகரன். இதை விட மக்களாட்சிக்கும் சபை மரபுகளுக்கும் மாறான செயல் இருக்க முடியாது. கொறடாவையே யார் என்று அங்கீகரிக்காமல்தான் வாக்கெடுப்பை நடத்தினார் பேரவைத் தலைவர். இதுவே அவர்களது உள்நோக்கத்தைக் காட்டியது.**

அப்படி அவர்கள் வாக்களித்து இருந்தாலும், கொறடா உத்தரவை மீறி மாறாக வாக்களித்தால் கட்சித் தாவல் சட்டப்படி அவர்களது பதவிகள் பறிக்கப்படும். அதைத் தெரிந்துதான், 25 பேரில் 5 பேர் நீங்கலாக மற்றவர்கள் அனைவரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையை ஏற்று நேற்றைய தினம் அவரோடு சேர்ந்து விட்டார்கள். அதாவது த.வெ.க. ஆட்சி அமைய வாக்களித்த 20 பேர், தங்களது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு விட்டார்கள். இது விஜய்க்கு விழுந்துள்ள பெரிய அடி ஆகும்.

**குதிரைப் பேரங்கள், சதிச் செயல்கள் மூலமாக அ.தி.மு.க.வை உடைத்து தனது ஆட்சிக்கு பலத்தை ஏற்றிக் கொள்ள நினைத்த விஜய்யின் கெட்ட எண்ணம் தோல்வியைத் தழுவி இருக்கிறது.**

**தனது ஆட்சிக்கு 119 உறுப்பினர் ஆதரவு இருக்கும் நிலையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த நான்கு எம்.எல்.ஏ.க்களை பதவி விலக வைத்தது விஜய்யின் இன்னொரு சதிச் செயல் ஆகும். பிற கட்சி எம்.எல்.ஏ.க்களை பதவி விலக வைத்து த.வெ.க.வில் இணைப்பதுதான் குதிரை பேரம் ஆகும். ஏற்கனவே அ.ம.மு.க.வைச் சேர்ந்த எம்.எல்.ஏ., குதிரை பேரம் மூலமாகச் சேர்க்கப்பட்டுள்ளார். ‘தூய சக்தி’ விஜய் மீது அடிக்கும் துர்நாற்றம் இவை.**

**இவர்களை ராஜினாமா செய்யச் சொல்வாராம். இடைத்தேர்தலில் அவர்களே வெற்றி பெறுவார்களாம். கற்பனை உலகத்தில் மிதக்கிறார் விஜய். இது என்ன சினிமாவா? மக்களை முட்டாள்களாக நினைத்துக் கொள்கிறார். ஒரு தடவை ஏமாந்த மக்கள் மறுதடவை ஏமாற மாட்டார்கள் என்பதை விஜய் உணரும் காலம் நெருங்கிக் கொண்டு இருக்கிறது.**

தகுதி நீக்கம் கோரும் மனு நிலுவையில் உள்ள நிலையில், எம்.எல்.ஏ.க்களின் பதவி விலகலை சபாநாயகர் ஏற்றுக் கொள்ளக் கூடாது. சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகரன் ஏற்றுக் கொண்டது சரியல்ல.

**சட்டமன்ற உறுப்பினர் ஒருவரை சட்டமன்றத்தில் தகுதி நீக்கம் செய்ய அந்தக் கட்சியின் கொறடா, பேரவைத் தலைவருக்குக் கடிதம் கொடுத்த பிறகு அந்த வேட்பாளர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவராகவே கருதப்படுகிறார். தகுதி நீக்கம் செய்யப்பட்டவருக்கு பதவியே இல்லாத போது, பதவி விலக முடியாது. பத்தாம் வகுப்பில் தோற்ற ஒருவர், ஒன்பதாம் வகுப்போடு டிசி கேட்பதைப் போல இருக்கிறது.**

கட்சி மாறுகிறவர்களின் சட்டமன்ற உறுப்பினர் பதவி மட்டுமல்ல, வேறு எந்தப் பதவியில் இருந்தாலும் அதையும் பறிக்கலாம் என்று அரசியல் சட்ட மறு ஆய்வு தேசிய ஆணையம் பரிந்துரைத்து இருக்கிறது.

இது தொடர்பாக வழக்குப் போடப்பட்டால், இறுதித் தீர்ப்பு வரும் வரை இடைத்தேர்தல் நடப்பதே தள்ளிப் போகும். விஜய் நினைப்பதைப் போல இடைத்தேர்தல்கள் வந்துவிடாது. அ.தி.மு.க.வில் போட்டியிட்டவர்களை, விலக வைத்து, அவர்களை த.வெ.க. சார்பில் வெற்றி பெற வைப்பது சினிமாவில் மட்டும்தான் நடக்கும். இந்த கதை டிஸ்கஷன், அரசியலில் நடக்காது.

★ தி.மு.க. கூட்டணிக் கட்சிகளைச் சேர்த்தல்,
★ அமைச்சர் பதவிகள் கொடுத்தல்,
★ அ.தி.மு.க.வை உடைத்தல்,
★ அ.தி.மு.க. உறுப்பினர்கள் சிலரைப் பதவி விலக வைத்தல்
★ அ.ம.மு.க. உறுப்பினரைப் பிரித்தல் - இப்படிப் பல செயல்களால்தான் விஜய், முதலமைச்சர் நாற்காலியில் உட்கார முடிந்துள்ளதே தவிர, மக்களின் முழுமையான ஆதரவால் அல்ல.

**மொத்தத்தில் 144 பலத்தை சபையில் காட்டிய விஜய், இன்று அதனை இழந்து நிற்கிறார். அவர் டெல்லி சென்றுள்ள நிலையில் இந்தச் சரிவு தொடங்கி இருக்கிறது. இன்றைய பலம் 119 தான். அதாவது, பெரும்பான்மை எண்ணிக்கையை விட ஒன்றே ஒன்று தான் அதிகம்.**

‘உடன்பிறப்பின் குரல்’ இணையதளத்தில் இதுவரை 4,60 லட்சம் பேர் பதிவு!

# அடுத்த கட்ட நடவடிக்கைகளை நான் திட்டமிட மே 31-க்குள் கருத்துகளைப் பதிவிடுங்கள்!

உடன்பிறப்பின் குரல்
Udanpirapin Kural
DRAVIDA MUNNETRA KAZHAGAM

## கழகத்தினருக்கு — தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, மே 29-**

**கழக உடன் பிறப்புகள் எவ்விதத் தயக்கமுமின்றி தங்களது கருத்துகளை இணையத்தில் பதிவிடுமாறு கழகத் தலைவர் - மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார்.**

**அதன்படி, ‘உடன்பிறப்பின் குரல்’ இணையதளத்தில் இதுவரை 4.60 லட்சம் பேர் தங்கள் கருத்துக்களைப் பதிவிட்டுள்ளனர் எனவும், அடுத்த கட்ட நடவடிக்கைகளை தாம் திட்டமிட இம்மாதம் 31-ஆம் தேதிக்குள் தங்களது கருத்துக்களை இணையதளத்தில் பதிவிடுமாறும் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:-

**அன்பு உடன்பிறப்புகளே,**

http://udanpirapinkural.in இணையதளத்தில் இதுவரை 4.60 லட்சம் கருத்துகளைப் பெற்றுள்ளோம். இந்த இணையதளத்தின் முக்கிய நோக்கமே உடன்பிறப்புகள் அனைவரும் எவ்வித் தயக்கமுமின்றி உங்கள் மனதில் தோன்றும் கருத்துகளைப் பதிவு செய்ய வேண்டும் என்பதுதான். உங்கள் கருத்துகள் நேரடியாக எனக்கே வந்து சேரும்.

இந்த இணையதளத்தில் உடன்பிறப்புகள் மட்டுமல்லாமல், கழக நிர்வாகிகள், கழக அனுதாபிகள், பொதுமக்கள் என அனைவரும் அளிக்கும் ஆலோசனைகளை ஆராய்ந்து நம் அடுத்தகட்ட நடவடிக்கைகளை நான் திட்டமிடுவேன். எனவே மே மாதம் 31 ஆம் தேதிக்குள் உங்கள் கருத்துகளை http://udanpirapinkural.in இணைய தளத்தில் பதிவு செய்யவும்.

கழக மாநிலப் பொறுப்பாளர்களும், கழக மாவட்டச் செயலாளர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், மற்ற முக்கியப் பொறுப்பாளர்கள் அனைவரும் மறக்காமல், இந்தச் செய்தி அனைத்து உடன்பிறப்புகளுக்கும் சென்றடையும் வண்ணம் உங்களுடைய சமூக வலைதளப் பக்கங்களிலும் Whatsapp குழுக்களிலும் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் அலட்சியத்தால்

# இந்தியா முழுக்க எரிசக்தி தட்டுப்பாடு!

## நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மே 29 -

தி.மு.க துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், கடந்த 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் எரிசக்தி சேமிப்பு குறித்து கேள்வி எழுப்பியதை சுட்டிக்காட்டியுள்ளார்.

அதில், இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில் வெறும் 10 நாட்களுக்கு மட்டுமே பெட்ரோலியப் பொருட்களை இருப்பு வைத்திருப்பது கவலைக்குரியது என தான் கூறியதை எடுத்துரைத்துள்ளார்.

அப்போது இது குறைவான கையிருப்புதான் என்பதை ஒன்றிய அரசே ஒப்புக் கொண்டதாக குறிப்பிட்டுள்ள கனிமொழி கருணாநிதி எம்.பி., கடந்த 2 ஆண்டுகளாக பெட்ரோலிய கையிருப்பை அதிகரிக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றம்சாட்டியுள்ளார்.



உலக அளவில் சிக்கல்கள் அதிகரித்து வரும் நிலையில், பெட்ரோலிய பொருட்கள் இருப்பு வைப்பதை விரிவுப்படுத்தும் பணி மிக மெதுவாக நடைபெறுவதாகவும், நீண்டகால திட்டமிடல் மற்றும் எரிசக்தி பாதுகாப்பில் அலட்சியம் காட்டப்படுவதாகவும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மோடி ஆட்சியில் வெற்று பேச்சுகளும், பொய் பித்தலாட்டங்களும், தாமதங்களும் மட்டுமே நடைபெற்று வருவதாக கனிமொழி கருணாநிதி எம்.பி. விமர்சித்துள்ளார்.

சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் மும்மொழி பாடத்திட்டத்தை செயல்படுத்தும் விவகாரம்:

# தடைகோரிய மனுக்கள் மீது பதிலளிக்க ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, மே 29 -

சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் மும்மொழி பாடத்திட்டத்தை செயல்படுத்த தடைகோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீது பதிலளிக்க ஒன்றிய அரசுக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

தேசிய கல்விக் கொள்கை அடிப்படையில் சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் ஒன்றிய அரசால் மும்மொழிப் பாடத்திட்டம் கொண்டு வரப்படுகிறது. இதன்படி, மாணவர்கள் தாங்கள் படிக்கும் மூன்று மொழிகளில் இரண்டு மொழிகள் கட்டாயம் இந்திய மொழிகளாக இருக்க வேண்டும். மூன்றாவது மொழியாக வெளிநாட்டு மொழியையும் தேர்வு செய்யலாம். 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மூன்றாவது மொழிக்கு பொதுத்தேர்வு நடத்தப்படாது என்றும், மதிப்பீடுகள் பள்ளிகள் அளவிலேயே மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மும்மொழிப் பாடத்திட்டத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், இரண்டு வாரங்களுக்குள் விரிவான பதில் அளிக்குமாறு ஒன்றிய அரசுக்கு உத்தரவிட்டனர்.

அதேநேரத்தில் இந்த புதிய நடைமுறை ஜூலை 1ஆம் தேதி முதல் அமலுக்கு வரவிருக்கும் நிலையில், இதற்கு இடைக்காலத் தடை விதிக்க நீதிபதிகள் மறுத்துவிட்டனர்.

எம்.எல்.ஏ. இல்லாத தொகுதிக்கு இனி நாங்கதான் எம்.எல்.ஏ.!

# பெருந்துறையில் வசூல் வேட்டைக்கு தயாரான த.வெ.க.வினர்!

பெருந்துறை, மே 29 –

எம்.எல்.ஏ. இல்லாத ஊரில் இனி நாங்கள் தான் எம்.எல்.ஏ. என பெருந்துறை பகுதியில் த.வெ.க. வினர் வசூல் வேட்டையை தொடங்கி உள்ளதாக கூறப்படுகிறது.

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் பெருந்துறை தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றவர் ஜெயக்குமார். இவர் தொகுதி பக்கம் வராமலேயே தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து த.வெ.க. கட்சியில் இணைந்து விட்டார். இதனால் தற்போது பெருந்துறை தொகுதி காலியாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், த.வெ.க. கட்சியை சேர்ந்த சிலர் டாஸ்மாக் கடை பார்களில் எப்படி வசூல் செய்வது என பலரிடம் ஆலோசனை கேட்டு வருகிறார்கள்.


இதுகுறித்து, டாஸ்மாக் கடைகளுக்கு நொறுக்கு தீனிகள் சப்ளை செய்யும் வியாபாரி ஒருவர் கூறுகையில், “நான் பெருந்துறை பகுதியில் உள்ள சில மதுபான கடை பார்களுக்கு நொறுக்கு தீனிகள் சப்ளை செய்து வருகிறேன். த.வெ.க. கட்சியை சேர்ந்த இளைஞர்கள் சிலர் என்னை சந்தித்து, டாஸ்மாக் கடைகளில் இருந்து ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மாமூல் கொடுப்பதாக சொன்னார்கள். மாமூலை டாஸ்மாக் விற்பனையாளர் கொடுப்பாரா? அல்லது பார் உரிமையாளர் கொடுப்பாரா என்பது எங்களுக்கு தெரியவில்லை.

அதனால் நாங்கள் யாரை பார்த்து மாமூல் கேட்க வேண்டும்? எந்தெந்த நாட்களில் கேட்க வேண்டும்? எவ்வளவு தொகை கொடுப்பார்கள்? என்பதை எங்களுக்கு சொல்லுங்கள்” என அந்த இளைஞர்கள் கேட்டதாக தெரிவித்தார்.

தற்போது எம்.எல்.ஏ.வே இல்லாத ஊரில் நாங்கள் தான் இனி எம்.எல்.ஏ.வாக செயல்பட வேண்டியதாக உள்ளது. எங்கெங்கு சென்றால் மாமூல் கொடுப்பார்கள் என்பதை எங்களுக்கு சொல்லுங்கள்” என கெஞ்சி கேட்டனர்.

இந்த இளைஞர்கள் அனைவரும் ஏழை மற்றும் நடுத்தர குடும்பத்தை சேர்ந்தவர்கள் போல் தெரிந்தனர். இது எங்கே போய் முடியும் என தெரியவில்லை என நொறுக்கு தீனி விற்பனையாளர் புலம்பி தள்ளினார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; ‘தமிழக முதல்வர்தான், பல்கலைகளின் வேந்தர் என்ற தி.மு.க.வின் நிலைப்பாட்டை பின்பற்ற வேண்டும் என்ற கட்டாயம் த.வெ.க. அரசுக்குக் கிடையாது’ என்கிறாரே உயர்கல்வித் துறை அமைச்சர் (காங்கிரஸ்) விஸ்வநாதன் ?

**பெரியதம்பி : ஆமாம் தம்பி; தி.மு.க.வின் நிலைப்பாடு, மாநில உரிமைகளை உயர்த்திப் பிடிக்கும் செயல் அதை மறுப்பதன் மூலம், ஒன்றிய அரசின் ஏஜெண்ட்டான ஆளுநரே, வேந்தராக இருக்கட்டும் என்கிறார் அமைச்சர். இது மாநில உரிமைகளை அடகு வைக்கும் அடிமைத்தனம். மாநில உரிமைகளாவது, மண்ணாங்கட்டியாவது, நமக்குப் பதவியே தெய்வம்; பதவியே சரணம் ! பதவி இன்றேல், பவிசேது, பாதுகாப்பேது, சொந்த பந்தமேது ? என்கிறாரோ அமைச்சர் !**